Tanjore Sarasvati Mahal Series No. 205

॥ महाकविसप्तर्षिप्रणीतं ॥

॥ मोहिनीविलासकुरवञ्जिनाट्यनाटकम् ॥

MOHINI VILASA

KURAVANCHI

(A DANCE DRAMA)

By

Mahakavi SAPTARSHI

Tanjore Maharaja Serfoji's
Sarasvati Mahal Library, Thanjavur.

*

[Price Rs. 5-00

Tanjore Sarasvati Mahal Series No. 205.

MOHINI VILASA
KURAVANCHI
(A DANCE DRAMA)

By

Mahakavi SAPTARSHI

*

Edited with Introduction in English and Tamil

By

Sri N. SRINIVASAN
Vedanta Visharata, Vedanta Siromani & Tamil Vidvan,
Sanskrit Pandit, Sarasvati Mahal Library Thanjavur.

TANJORE MAHARAJA SERFOJI'S
SARASVATI MAHAL LIBRARY, THANJAVUR.

*

1985] [Price : Rs. 5—00

First Edition : — 1985.

Published by :

TANJORE MAHARAJA SERFOJI'S
SARASVATI MAHAL LIBRARY, THANJAVUR.

Published with the financial assistance from the Ministry of Education and Social Welfare, Govt. of India.

Printed at

T. M. S. S. M. LIBRARY PRESS, THANJAVUR.

॥ महाकविसप्तर्षिप्रणीतं ॥

॥ मोहिनीविलासकुरवञ्जिनाट्यनाटकम् ॥

*

सरस्वतीमहालय संस्कृतपण्डितेन
तञ्जावूर् न. श्रीनिवासेन
वेदान्तविशारद - वेदान्तशिरोमणि - तमिल विद्वद्भिः

संशोध्य, आङ्गलद्राविडीप्रस्तावनासहितं परिष्कृत्य सम्पादितम्

प्रकाशकेन

तञ्जावूर् महाराजाशरभोजी सरस्वतीमहालय ग्रन्थालयेन
प्रकाशितं विजयतेतमाम्

१९८५]   [रु. ५—००

प्रथमावृत्तिः – १९८५.

प्रकाशकः

तंजावूर महाराजा शरभोजी सरस्वती महाल ग्रंथालयः तंजावूर्.

मुद्रकः

सरस्वती महाल् ग्रंथालय मुद्रणालयः, तंजावूर्.

PREFACE.

The Sarasvati Mahal Library, Thanjavur is a renowned treasurehouse of rare manuscripts of yore in Sanskrit, Tamil, Telugu and Marathi languages. The Library had so far published 204 rare manuscripts in Sanskrit and other language with the financial aid from the Government of India and the Government of Tamilnadu. The book under publication is 'Kuravanchi' in Sanskrit. Kuravanchi' is a form of poetic grammar particularly known and seen in the rich treasure of Tamil literature. This form of poetic drama was introduced in Sanskrit language by the poet Saptharishi. He was poet laureate of the king Shaji's Court. This has been written under the caption in Sanskrit as 'Mohini Vilasa Kuravanchi' The King Shaji has been addressed and adored in the poetic drama.

Thiru N. Srinivasan, Sanskrit Pandit of this Library was entrusted with the work of editing this book. He has given explanatory notes in Tamil to explain the grammatic comparison of both the languages Tamil and Sanskrit, to help the readers appreciate the fine composing of the poet. This Institution is bound to express its gratitude

to the Government of India and the Government of Tamilnadu for the financial aid, continuously given to this Institution to encourage in bringing out the treasure hidden in manuscripts, to the knowledge of the public. As the Director of the Library I convey the gratitude, to the Government of India and Government of Tamilnadu.

It gives me pleasure to release this publication and it is hoped that it will win the appreciation of the scholars and the commoners as well.

T. R. RAMASWAMY, I. A. S.,
Collector and Director,
T. M. S. S. M. Library.

Thanjavur,
27 - 1 - 85.

INTRODUCTION

Shahaji II (1684-1710) was a great admirer of Arts and literature. He caused many a poets to creat new types of "Kavyas" and "Dramas". He himself was a good poet. He had also created many creative works. Some of the great poets of his court wrote some works adorning him as the hero of the poem. They are valuable, because they throw lighet on historical facts.

One such work is "Mohini Vilasa Kuravanji". This was written by Saptarishi, a poet in the court of Shahaji II. The remarkable feature of this poem is that this work has been written both in Tamil and Sanskrit. A blend of Sanskrit and Tamil in the same stanza or in the same sentence of a prose is a common feature in the Vaishnavite literature. But separats stanzas for both these languages are devoted in this work. This paper manuscript has been written in Devanagari script. Even the Tamil language is also transliterated and transcribed in Devanagari. By this one can make a study on the phonological system of Tamil language in 18th century.

Further, the most striking point is that the prosody of Tamil language is applied to the Sanskrit language. The poet opted this choice to check up the application of prosody of a languge

to another language and he has also succeeded in this attempt. The Tamil prosody like "Aruscir Viruttam", "Enscir Viruttam" "Kattalai Kalithurai" "Agavarpa" "Venba" "Mattu Viruttam", "Daru" and "padam" are aptly applied to Sanskrit language.

The form of poem 'Kuravanji' in Tamil is popularly known to the Tamil knowing people. This type of lyrics can be had only in Tamil. It has been introduced to Sanskrit by the poet. Normally it deals with love in separation and the Union of lovers with the intervention of Kurathi "Singi" and Kuravan "Singan" foretelling the heroine and hero respectively regarding this inseparable union in future.

Here the Kurathi is described without a basket in the left hand and the 'Kuravan' is introduced directly as if he were in search of 'Kurathi'. This kind of deviation is not seen in any of the Tamil 'Kuravanji'.

Apart from the literary point of view, it is most important in the historical study. It gives some fragments of History of Shahji. He narrates the incident of seeking help from Shahji by Rajaram, the son of the great Shivaji, to fight with Aurangazeep's army lead by Julfiirkhan. Shahji sends his army and wins over the moghal invasion.

This valuable manuscript was donate to the Library in 1927, by Mr. R. Ry. Atmaram Goswami of Thanjavur, in memory of his father which were the collection of his grand father Mr. R. Ry. Thyagaraja Goswami.

This now published by the Library with Tamil introduction and critical study. My thanks are due to the District collector and Director of this Library Mrs. O. P. Sosamma, I. A. S. for having given permission to edit. I am also thankful to the present District Collector and Director Mr. T. R. Ramaswami, I. A. S, for having given a preface to this book. It will not fulfiil my duty if I fail to record my heartful thanks to Thiru A. Panchanathan, M. A., B. Lib. Sc., Administrative Officer i/c, for making all arrangements to bring out this work. I am also indepted to all the members of the Library staff and the press for their co-operation in writing this book and printing it.

Thanjavur,
18—12—84.

N. SRINIVASAN,
Sanskrit Pandit.
Sarasvati Mahal Library.

AN APPEAL

Manuscripts on Palm Leaf or Paper of the ancient works of the wise men of the past, are the great treasures, solely inherited by the Nation, and it is the moral obligation of persons who possess them to preserve them safely for the future generations of mankind.

Probably you have some of these in your possession or you know friends or neighbours who possess them. You can make a great contribution to the cause of the preservation not only of our National Culture but also of the Culture of Humanity as a whole by arranging to present such manuscripts to the famous T. M. S. S. M. Library, Thanjavur.

The manuscripts so presented will be accepted and acknowleged with pleasure and gratitude by the authorities of the Library, preserved with meticulous care and made available to successive generations of readers and scholars for study and research. The hitherto unpublished works found among them, will be printed and published in due course, as facilities occur, with the expression of the Library's gratitude for your gift.

The great Scholar-King of Tanjore, Rajah Serfoji, has attained immortal fame by dedicating enormous time and wealth to the expansion and firm establishment of this world-famous 'Sarasvati Mahal Library'. It is open to you to share the honour of Serfoji, in your own measure. by contributing your manuscripts to the great institution built by him.

This great Honour is beckoning to you to accept it, will you hasten to take it up ?. The Library waits for your answer.

Collector & Director,
T.M.S.S.M. Library, Thanjavur.

முகவுரை

****

சகம் 1597 நள ஆண்டு (கி. பி. 1675) சித்திரை மாதத்தில் தஞ்சையில் மராட்டிய அரசு தோன்றியது. சத்ரபதி சிவாஜியின் தம்பியான வெங்காஜி என்ற ஏகோஜி தஞ்சையில் முதல் மராட்டிய அரசனாக முடிசூட்டிக் கொண்டார். இவரைத் தொடர்ந்து 10 மன்னர்கள் 179 ஆண்டுகள் தஞ்சையை ஆண்டனர். இவர்களுடைய ஆட்சிக் காலத்தில் பல மொழிகளில் இலக்கியங்கள் தோன்றின. புராதனமான நெறிகளும், கலைகளும் பேணப்பெற்றன.

முதலாம் ஏகோஜியின் பட்டத்தரசியான தீபாம்பாள் சிறந்த அறிவாளியாகவும், அரசியல் நிர்வாகியாகவும் திகழ்ந்தவர். இவர்களுக்குப் பிறந்தவர்களே இரண்டாம் சகஜி, முதலாம் சரபோஜி, முதலாம் துளஜா ஆகியவர்கள். இம் மூவருமே சிறந்த அறிவாளிகள். இவர்களுடைய ஆட்சிக்காலத்தில் பன்மொழிகளிலும், இலக்கண இலக்கியங்களும், நாடகங்களும், இசை நூல்களும் தோன்றின.

இந்த 'மோகினி விலாஸக் குறவஞ்சி' நாட்டிய நாடகம் இரண்டாம் சகஜியைப் (கி. பி. 1684 — 1710) பாட்டுடைத் தலைவனாகக்கொண்டு பாடப்பட்ட நூலாகும்.

ஷாஜி மன்னனின் ஆட்சிச் சிறப்பு :-

தஞ்சையை ஆண்ட மராட்டிய மன்னர்களில் மிகச் சிறந்து விளங்கியவர் இரண்டாம் ஷாஜி. இவர் கி. பி. 1684 முதல் 1710 வரை 26 ஆண்டுக்காலம் ஆட்சிசெய்தார். இக்காலத்தை ஒரு பொற்காலம் என்று கூறலாம். இவரது ஆட்சிக்காலத்தில் வடமொழி, தமிழ், மராத்தி, தெலுங்கு

ஆகிய மொழிகளில் ஆற்றலுள்ள பல புலவர்கள் தஞ்சையில் ஒருங்குகூடி அளவளாவினர். தங்கள் தங்களது மொழிகளில் கலை, இலக்கியப்பணிகளை மேற்கொண்டனர். இவர்கள் மகிழ்ச்சியாகவும், நிம்மதியாகவும் வாழ்ந்து இலக்கியப்பணிகளை மேற்கொள்ளவேண்டும் என்று மன்னர் கருதினார். இதனால் இவரும், இவரது தாய் தீபாம்பாளும் தீபாம்பாபுரம், திருவிசநல்லூர் என்று வழங்கப்பெறும் ஷாஹராஜபுரம், பாஸ்கரராயபுரம் ஆகிய கிராமங்களை வித்யாதானமாகக் கொடுத்தும், வித்வான்கள் குடியிருக்கப் பல அக்ரஹாரங்களைத் தோற்றுவித்தும் தக்க ஏற்பாடுகளைச் செய்தனர். இதனால் பல புலவர்கள் இவரது ஆதரவால் நிம்மதியாக வாழ்ந்தனர். இலக்கியப்பணிகளைச் செய்தனர். இதனால் பல இலக்கண இலக்கியங்கள் தோன்றின. இவைமட்டுமின்றி —

இப்புலவர் பெருமக்களிடம் குருகுல வாசஞ்செய்து கல்வி கற்று அறிஞராயினோர் பலர். இவரது காலத்தில் வாழ்ந்து இம்மன்னன்மீது ஒரு சம்பு காவியம் இயற்றிய பூமிநாதகவி என்னும் ஒரு புலவர் தமது நூலில், "மன்னன் புலவர்களுக்கு அமைத்துக்கொடுத்துள்ள வீட்டு முன்றில்களில் வாழைமரங்கள் செழித்து வளர்ந்துள்ளன. இன்பமயமான இளங்காற்று வீசுகின்றது. வாழை மரங்களின் இலைகளும், அதன் இளங்கன்றுகளின் இலைகளும் அசைகின்ற காட்சி ஆசிரியர்கள் தத்தம் இல்லங்களில் மாணவர்களுக்குச் சாஸ்திரங்களைக் கற்றுக்கொடுக்கும்போது, தங்களையும் மறந்து தலைகளை ஆட்டிக் கற்பதும், கற்றுக் கொடுப்பதையும் போலப் பாவனை செய்வதைப்போல் தோன்றுகிறது" என்கிறார்.[1] வாழையடிவாழையாகப்

1 "...नानादिगन्तवास्तव्यागन्तुकपण्डितजनशिरः कम्पाभिनन्द्यमानकर्कश महाग्रन्थ
मर्मभेदनालेकर्मिग विबुधकुञ्जर समञ्चितः, ...कदलीपट्टमिथ्यापुस्तकहस्तनाटित
शिष्यभावसत्वयः परिवर्तव्याख्यातृताभिनयकमनीयानुपनतनतुरबालकविला-
सित विद्वद्गृह बहिर्वेदिकाकोणः..."

-धर्मविजयचम्पूः page 14.

பேணப்பட்டு வரும் கல்வியை 'வாழைமரத்தின்மூலம்' காட்டுகிறான் கவிஞன். இவ்விதமாகத் தனது நாட்டையே ஒரு பல்கலைக்கழகமாக்கி வைத்திருந்தார் மன்னர் ஷாஜி. இவரைப் புலவர்கள் 'அபிநவ போஜன்' என்று பாராட்டினர். வடமொழி, தமிழ் ஆகிய இருமொழிகளிலும் புலமை நிறைந்த பல புலவர் மணிகள் இவரது அவையை அலங்கரித்தனர். இவரது அவையில் இசை, நாடகம், நாட்டியம், நாட்டிய நாடகம், இந்துஸ்தானி ஸங்கீதம் ஆகிய கலை நிகழ்ச்சிகள் தினந்தோறும் நடைபெறும். இத்துறைகளில் வல்ல கலைஞர்களும், அறிஞர்களும் இவரது அவைப்புலவர்களாக இருந்தனர். பஜனோத்ஸவ பத்ததி இம்மன்னனுடைய காலத்தில்தான் தமிழகத்தில் வளர்ச்சியடைந்தது. ஸம்ஸ்கிருதம் - தமிழ் - தெலுங்கு - மகாராஷ்ட்ரம் ஆகிய மொழிகளில் இவர்மீது பாடப்பட்ட நூல்களும், இவர் காலத்தில் எழுந்த வேறு நூல்களும் ஏராளம் ஏராளம். இத்துணைச் சிறப்புக்கும் காரணம் இம்மன்னனே பெரும் புலவராகவும், பெரும் கலைஞனாகவும் இருந்ததுதான் எனின் அது மிகையாகாது. இவற்றைக் கலைத்துறைகளைச் சார்ந்த நூல்கள், காவியங்கள் என இரண்டு வகையாகப் பிரிக்கலாம். மன்னன் ஷாஜியின்மீது பாடப்பெற்றவை, மன்னனால் பாடப்பெற்றவை எனவும் வகைப்படுத்தலாம். அங்ஙனம் இம்மன்னனைப் பாட்டுடைத் தலைவனாகக்கொண்டு பாடப்பட்ட நூல்களில் 'மோகினி விலாஸக் குறவஞ்சி' என்னும் இந்த நூலுமொன்று.

குறவஞ்சி நாடகத்தின் தோற்றமும், வளர்ச்சியும்

தமிழ் மொழியின் பிரபந்த வகைகளைத் தொண்ணூற்றாறு வகைகளாக வகுத்துள்ளனர் நம்முன்னோர். இவற்றிற்குரிய இலக்கணங்களைப் பன்னிருபாட்டியல், நவநீதப் பாட்டியல் போன்ற பாட்டியல் நூல்களில் காணலாம். இவ்வகைப் பிரபந்தங்களில் 'குறத்திப்பாட்டு' என்னும் பெயரில் ஒருவகைப் பிரபந்தம் காணப்படுகிறது. இப் பிரபந்தம் கலம்பகங்களில் காணப்படும் 'குறம்' என்னும்

உறுப்புச் செய்யுளை யொட்டி யெழுந்தது. பிரபந்தங்களில் காணப்படும் குறத்திப்பாட்டும், கலம்பகத்துறுப்பான குறமும் கலந்து, இவற்றுடன் இசைப்பாட்டையும் சேர்த்து "குறம்" என்னும் தனிப்பிரபந்தம் எழுந்தது. இவற்றைப் பின்பற்றி நாடக முறையில் நடிப்பதற்காகப் புனையப்பட்ட 'குளுவ நாடகத்தின் இறுதிப் பகுதியையும் இணைத்து இன்று காணப்படும் குறவஞ்சி நாடகத்தை உருவாக்கி யுள்ளனர். மேலே காணப்பட்ட குறத்திப்பாட்டு, குறம் போன்றவற்றை சிறிது விளக்கமாகக் காண்போம்.

1. **குறம் :** (கலம்பகத்தின் உறுப்புவகை)

இவ்வகை உறுப்புச் செய்யுட்களில் தலைவியால் காதலிக்கப்பட்ட தலைவன் இன்னவன் என்றும், அவனை குறிப்பிட்ட காலத்திற்குள் தலைவி அடைதல் உறுதி என்றும், குறத்தி குறிதேர்ந்து கூறுவதாகப் புனைந்திருப்பர்.

2. **குறத்திப் பாட்டு :-** 'குறத்தில்' கூறப்பெற்ற செய்திகளையே சற்று விரிவாகக் கூறவல்லது 'குறத்திப் பாட்டு' என்னும், சிற்றிலக்கியம் என்பர். எனினும், இந்த இலக்கியம் 'குறம்' என்னும் உறுப்பை ஒட்டியதே என்று துணிந்து கூறச் சான்றில்லை.

இதற்குரிய இலக்கணத்தை—

"இறப்பு நிகழ்வெதிர் வென்றுமுக் காலமும்
திறப்பட உரைப்பது குறத்திப் பாட்டே
குறத்திப் பாட்டும் அதனோ ரற்றே" என்று

பன்னிரு பாட்டியலில் காணலாம். இறந்தகாலம், நிகழ் காலம், எதிர்காலம் என்னும் மூன்று காலத்தும் நிகழ்ந்தனவற்றை அறிந்து 'குறத்தி' திறமையாகக் குறியுரைப் பதனைப் பாடுவதே குறத்திப்பாட்டு என்றும் இதனைப் பத்தேபாட்டால் பாடுதற்குரியது என்றும் இலக்கணம் உணர்த்தும்.

குறம் : (சிற்றிலக்கியம்)

மேலே கூறப்பட்ட குறம் - குறத்திப்பாட்டு என்பன வற்றைப்பின்பற்றி 'குறம்' என்னும் சிற்றிலக்கியம் தோன்றி யுள்ளது. இடையிடையே சிந்துபோன்ற இசைப்பாடல்கள் விரவிவருமாறு பல பாடல்களால் இயற்றுதற்குரியது. மதுரை மீனாட்சியம்மை குறம், மின்னொளியாள் குறம் ஆகிய நூல்கள் எடுத்துக்காட்டுகளாகத் திகழ்கின்றன.

குறவ நாடகம் : என்று ஒருவகை நாடக நூல் உண்டு. அது நடிப்பதற்கென்றே எழுதப்பெற்றுள்ளது. இதன்கண் குறவன், குறத்தி இவர்களுடைய வாழ்க்கைப் பகுதிகள் நாடக முறையில் விளக்கப்பட்டுள்ளன. மீனாட்சி யம்மை குறம் போன்ற இலக்கிய அமைப்போடு குறவ நாடகத்தின் நாடக அமைப்பும் சேர்ந்தே 'குறவஞ்சி' என்னும் நாடகம் பிற்காலத்தில் தோன்றியுள்ளது.[1]

'குறத்' திற்கும் **'குறவஞ்சி'**க்கும் உள்ள வேறுபாடுகள் ;

குறம்	குறவஞ்சி
1. குறத்தியின் கூற்று மட்டுமிருக்கும்.	1. வேறு பலர் கூற்றுகளும் இருக்கும்.
2. இலக்கியத்திற்காக மட்டும் படைக்கப் படுவது.	2. நடிப்பதற்ககப் படைக்கப்படுவது
3. இசைப் பாடல்களில் அங்க வேறுபாடுகள் (பல்லவி, அனுபல்லவி, சரணம் போன்றவை) இருக்காது.	3. அங்க வேறுபாடுக ளுண்டு. இராகங் களின் குறிப்புக்களும் காணப்படும்.

1. கலைக்களஞ்சியம் - பக்கம் 131.

குறவஞ்சியின் பொதுவிலக்கணம் :-

காப்பும், மங்களமும் கூறப்பெற்றபின் கட்டியக் காரன் (சூத்ரதாரி) வருதலும், பாட்டுடைத் தலைவன் பவனி வருதலைப்பற்றிக்கூறுதலும், தலைவன் பவனி வருகை யில் தலைவி அவனைக்கண்டு காமுறுதலும், அவளுடைய விரகவேதனையும், இதனால் மன்மதன், சந்திரன், தென்றல் முதலியவற்றை நிந்தித்துப் புலம்பலும், தலைவியின் தோழி வருதலும், அவளைத் தலைவி தூதுபோக்கலும், குறத்தி வருதலும், அவளிடம் நீ யாரெனத் தலைவி வினவுதலும், தேசம், மலைவளம், சாதிவளம், நதிவளம் முதலியவற்றைக் கேட்டலும் அமைக்கப்படும். குறத்தி இவைகளைக் கூறிய பின் தன் சாதியார் வசிக்கும் மலையின் பெருமையைக் கூறு தலும், "யார் யாரிடத்தே குறிசொல்லி எவ்வெப் பரிசுகளை நீ பெற்றாய்?" என்பது முதலியவற்றைத் தலைவி கேட்டலும், குறத்தி அவற்றைக் கூறலும், பாட்டுடைத் தலைவனுக்குக் குறிசொல்லிப் பெற்ற வரிசைகள் இன்னவை யென்று சொல்லுதலும், பிறகு தலைவி தன் கையைப் பார்த்துக் குறிசொல்ல வேண்டுமென்று கேட்டலும், குறத்தி இறை வழிபாட்டிற்குரியவற்றைச் செய்யும்படி சொல்லித் தெய்வங்களை வேண்டிக் குறி சொல்லுதலும், இறைவன் திருவருள் வாய்க்குமென்றும் தலைவன் உன்னை மணந்தருள்வான் என்றும் கூறுவாள்.

குறத்தி இவ்வாறு இருக்க, அவளுடைய கணவனாகிய குறவன் தன்னுடைய கையாளாகிய குளுவனோடு (மலை வாணருக்குள்ளே ஒரு சாதியான்) வேட்டைக்குப் புறப் பட்டு வருதலும், பறவைகளைப் பிடிக்கும்போது அவனுக்குத் திடீரென்று குறத்தியின் நினைவு வருதலும், அவளுடைய பிரிவால் வருந்துதலும், குறத்தியின் அடையாளங் கூறிக் குளுவனை அனுப்புதலும், குளுவன் பாட்டுடைத் தலைவன் நகரத்தில் அவளைக் காணலாம் என்று கூற இருவரும் அங்கே சென்று அவளைக் காணலும், கண்டு தன் ஆற்றாமையைப் புலப்படுத்தி அவளைப் பலவாறு வினவு

தலும். அவள் விடை கூறுதலும், இருவரும் சேர்ந்து தலைவனை வாழ்த்துதலும் குறவஞ்சியின் இறுதிப் பகுதி யாகும்.[2]

யாப்பு முறை: ஆசிரியப்பா, வெண்பா, தரவு கொச்சகம், கலித்துறை, ஆசிரிய விருத்தம், கலி விருத்தம் போன்ற இயற்றமிழ்ச் செய்யுட்களும் சிந்து, கீர்த்தனை, கண்ணிகள், தரு, பதம் போன்ற இசைப் பாடல்களும் விரவிவருமாறு ஆக்கப்பெறும்.

மொழியமைப்பு; குறவஞ்சியில் 'வதைக்குது', 'உதைக்குது' தோணிதைள், வரப்போறான், வண்ணச் சேலைகொண்டு, பதக்கம் ரெண்டு போன்ற சேரி மொழியில் கொச்சைச் சொற்கள் பயன்படுத்தப் படுகின்றன. தலைவி, தோழி ஆகியோர் உயர்ந்த செம்மொழியிலும், குறத்தி, குறவன் ஆகியோர் சேரி மோழியிலும் பேசுவதுபோன்று கவிஞர்கள் அமைப்பர். குறத்தி உலக அனுபவமிக்கவளா யிருப்பதால் தெலுங்கு, கன்னடம், ஆங்கிலம், சம்ஸ்கிருதம் ஆகிய மொழிகளைக் கலந்து பேசுகிறார்கள். இவை யெல்லாவற்றையும் நோக்கும்போது குறவஞ்சி நாடகம் சேரி மொழியையும், செம்மொழியையும் தக்கவாறு இணைத்து இயற்றப்படுவதற்குரியது என்பது அறியலாகும்.

இசையின் அமைப்பு:

பெரும்பான்மையான குறவஞ்சிகளை உயர்ந்த - நடுத்தர - மெல்லிசை கொண்டதென்று மூன்று வகைகளாகப் பிரிக்கலாம். குறவஞ்சிகளில் காணப்படும் இராகங்கள் யாவும் சுத்தமான நாட்டுப் பாடல்களின் மெட்டுகளுடன் கூடிய ரக்திராகங்களே என்றும், விருவிருப்பான சூழ்நிலைக்

---

2. சரபேந்திர பூபாலக் குறவஞ்சி
— டாக்டர் உ. வே. சாமிநாதையர் பதிப்பு முகவுரை.

கேற்ப நல்லதொரு சூழ்நிலையை ஏற்படுத்தக்கூடிய நாட்டியங்களுக்கு ஏற்ற ஜதிக் கோர்வைகளும் சாகித்யங் களினிடையில் பொருத்தப்பட்டும் தியாகேசர் குறவஞ்சியில் காணப்படுகிறது என்றும் திருமதி டாக்டர் வே. பிரேம லதா குறிப்பிட்டுள்ளார்.[3]

தஞ்சையில் தோன்றிய குறவஞ்சி நாடகங்கள்

"இதுகாறும் பார்க்கக் கிடைத்துள்ள குறவஞ்சி நாடக நூல்களில் ஷாஜி மன்னர்மீது பாடப்பெற்ற குறவஞ்சி நாடகங்களே காலத்தால் முந்தியன. அதற்குப் பின்னரே திருக்குற்றாலக் குறவஞ்சி படைக்கப்பட்டுள்ளது. இக்கருத்தை திரு வெ. வேணுகோபாலன் அவர்களும் குறிப்பிட்டுள்ளார்.[4] தஞ்சையில் தோன்றிய குறவஞ்சி நூல்கள் ;

✓ 1. ஷாஜி மன்னன் குறவஞ்சி, 2. மோகினி விலாச குறவஞ்சி, 3. தியாகேசர் குறவஞ்சி, 4. வெள்ளைப் பிள்ளையார் குறவஞ்சி, முதலிரண்டு குறவஞ்சி நாடக நூல்களின் பாட்டுடைத் தலைவன் மன்னன் ஷாஜி. மூன்று வது திருவாரூர் தியாகேசப்பெருமான். நான்காவது கீழ வாசலில் எழுந்தருளியுள்ள வெள்ளைப்பிள்ளையார் என்னும் கோட்டைவெளிப் பிள்ளையார்மீது பாடப்பட்டது. 1—3 எண்ணுடைய நூல்களின் ஆசிரியர் முத்துக்கவிராயர். 2-வது நூலின் ஆசிரியர் சப்தரிஷி. 4-வது நூலின் ஆசிரியர் தெரியவில்லை. மேலே காணும் இரு கவிவாணர் களும் ஷாஜி மன்னரின் அவைப் புலவர்கள்.

இம்மன்னரின் காலத்தில் இந்தக் குறவஞ்சி நூல்கள் தஞ்சையில் பிரபலமடைந்துவிட்டதால் இவர் காலத்தில்

3. தியாகேசர் குறவஞ்சி முகவுரை. சரஸ்வதி மகால் நூலக வெளியீடு.

4, ஐந்து தமிழிசை நாட்டிய நாடகங்கள். ,,

எழுந்த நாடகங்களில் குறத்தியின் பாத்திரப்படைப்புப் படைக்கப்பெற்றுள்ளன எனில் மிகையில்லை.[1] தஞ்சையில் இந்நூல்கள் பிரபலமடைந்தபோதிலும் 'திருக்குற்றாலக் குறவஞ்சி'யைப்போல் இந்நூல்கள் தமிழகம் முழுவதும் புகழடையவில்லை. அதன் காரணத்தைச் சிந்திக்கும்போது

1. ஒரு குறுநில மன்னனைப் பாட்டுடைத் தலைவனாக இந்தக் குறவஞ்சி நூல்களில் படைக்கப்பெற்றுவிட்டதால், அவன் அரசு செலுத்திய காலத்திலும், அவனது நிலப் பகுதியில் மட்டுமே நடிக்கப்பெற்றும் வந்திருக்கின்றன. மன்னன் காலமான பிறகு மக்களிடையே இந்நூல் பரவும்/நடிக்கும் வாய்ப்பு ஏற்படாமல் இருந்திருக்கலாம்.

2. குறவஞ்சி நூல்கள் அச்சாகாமல். இந் நூலகத்தின் பல ஏடுகளுடன் மறைந்து கிடந்தமையாலும் மக்களிடையே பிரபலமடையவில்லை. தியாகேசர் குறவஞ்சியில் சில பாடல்கள் மட்டும் இந்த நூற்றாண்டுவரைப் பரவி வந்துள்ளன. ஆயின் நூல் முழுதுமே மக்களிடையே பரவவில்லை என அறியமுடிகிறது.

3. தஞ்சையில் குறவஞ்சி நூல்கள் தோன்றியபின் சுமார் 20 ஆண்டுகளுக்குப் பின்னரே திருக்குற்றாலக் குறவஞ்சி தோன்றியுள்ளது. இந்நூல், இறைவர் திருக்குற்றால நாதரையே பாட்டுடைத் தலைவனாகக் கொண்டமையால் நிலப்பாகுபாடு இல்லாமல் தமிழகமக்கள் அனைவராலுமே விரும்பி வரவேற்கப்பெற்றுள்ளது என்று கொள்ள இடமளிக்கின்றது. ஆதலால் தஞ்சையில் தோன்றிய இக் குறவஞ்சிப் பிரபந்தங்கள் காலத்தால் முன்தோன்றியும் தோன்றாமலேயே புதையுண்டுகிடந்தன எனில் மிகையில்லை.

1, காந்திமதி பரிணயம் — நான்காவது அங்கம்
—சரஸ்வதி மகால் நூலக வெளியீடு.

மோகினி விலாஸ குறவஞ்சியின் நூலாராய்ச்சி :

1. நூலமைப்பு : தமிழ் நாட்டில் வழங்கிவரும் ஏனைய குறவஞ்சியுடன் இந்த 'மோகினி விலாஸக் குறவஞ்சி'யை ஒப்பிடும்போது அதிக வேற்றுமையில்லை. ஆனால் குறத்தி குறிகூறுமிடத்தில் அவள் பயன்படுத்தும் பொருட்கள், கையாளும் முறைகளில் வேற்றுமை காணப் படுகிறது. குறத்தி சிறுமுறத்தில் நெல்லைப் பரப்பி, அவற்றை ஒற்றை இரட்டையாக எண்ணிப் பலனறிந்து கூறுதலும், அதைப்போலவே கழங்குகளை எண்ணிப் பார்த்துக் குறிகூறுதலும் குறவஞ்சி யிலக்கியங்களில் காண முடிகிறது. ஆனால் இக்குறவஞ்சியில் இந்த நிகழ்ச்சிகளில் எதுவுமே காணப்பெறவில்லை. இறைவனை தியானிப்பது மட்டுமே காணப்படுகிறது.

அடுத்துக் குறத்தியின் கைகளில் மாத்திரைக்கோலும், கூடையும் இருப்பதாக ஏனைய குறவஞ்சி நூல்களில் காணப் பட்டாலும், இந்நூலில் குறத்தியின் கையில் கூடை யிருப்ப தாக மட்டும் குறிப்பிட்டுள்ளது. (பாட்டு எண் 23)

சிங்கன் பறவை வேட்டையாடிக்கொண்டு இருக்கும் போது சிங்கியின் நினைவுவர அவளைத் தேடிக்கொண்டு வருவதுபோல மற்ற குறவஞ்சிகளில் கதையமைக்கப்பெற் றிருக்கும். ஆனால், ஆசிரியர் இதைக் குறிப்பிடாமல் குறவனை அறிமுகம் செய்யும்போதே சிங்கியைத் தேடிக் கொண்டு வருவதுபோல (பாட்டு எண் 44) அமைத் துள்ளார்.

2. நூற்சிறப்பு: இக்குறவஞ்சியின் பாட்டுடைத் தலைவன் ஆகிய மன்னன் ஷாஜியின் (கி. பி. 1684—1710) காலத்தில் பல நாடகங்களும், இசை நாட்டிய நாடகங் களும், தோன்றியுள்ளன. அவை ஸம்ஸ்கிருத நாடகங் களில் காணப்பெறும் மிகப் பழமையான முறையையே

பின்பற்றி அதிலிருந்து சிறிதும் மாறுபடாது அமைந்திருக்கின்றன.

மேலும், சம்ஸ்கிருதமும், தமிழும் நம் தமிழகத்தில் எப்பொழுதும் நல்ல ஆதரவளிக்கப்பெற்று ஆக்கபூர்வமாகவே வளர்க்கப்பெற்றுவந்துள்ளன, தொல்காப்பியம், நன்னூல் போன்ற தமிழ் இலக்கணங்களில் 'வடமொழியாக்கம்' என்ற தனி இயலையே அமைத்துள்ளனர் நம் முன்னோர்கள். இதே கண்ணோட்டத்துடன் ஷாஜி மன்னன் ஆட்சிக் காலத்திலும் தஞ்சையில் சம்ஸ்கிருதமும்-தமிழும் வளர்ந்தன. அந்தந்த மொழிகளில் பற்பல இலக்கியங்கள் தோன்றின. இவ்விரண்டு மொழிகளையும் பேணிய மன்னன்மீது இவ்வாறு 'மணிப்ரவாள' நடையில் ஒரு 'குறவஞ்சி' நூல் இயற்றப்பெற்றுள்ளது சாலப் பொருத்தமாகவே தோன்றுகிறது.

தமிழ் மொழியின் யாப்பின் அமைப்பும், சம்ஸ்கிருத மொழியின் யாப்பின் அமைப்பும் தனித்தனியானவை. ஆயின் சிலவிருத்தங்கள் இருமொழிக்கும் ஓசையில்மட்டும் பொதுவாக அமைந்திருப்பதையும் நன்கு உணரலாம். ஆயின் இந்த நூலில் தமிழிற்கே சிறப்பாக உரிய கட்டளைக் கலித்துறை, கலித்துறை, வெண்பா. அறுசீர், எண்சீர் விருத்தங்கள் ஆகியவற்றின் யாப்பிலக்கணத்தைப் பின்பற்றி, ஸம்ஸ்கிருத மொழியில் பாடல்களை அமைத்திருக்கிறார். இவற்றை சுலோகம் என்று அழைக்கலாமா? என்னும் வினவை வடமொழி ஆராய்ச்சியாளர்களுக்கே விட்டுவிடுகிறேன், இந்நூலாசிரியரின் இருமொழிப் புலமையை நன்கு தெரிந்துகொள்ளமுடிகிறது. இது இரு மொழியிலும் யாப்பிலக்கண ஆராய்ச்சியாளர்களுக்கு ஒரு புதுமையான விருந்து எனின் மிகையில்லை. இந்த முயற்சி ஸம்ஸ்கிருத மொழியின் யாப்பியலுக்கும் ஒரு புதுமை.

இதைப்போலவே, ஸம்ஸ்கிருத இலக்கிய உலகில் இதுவரை "குறவஞ்சி" என்ற பிரபந்த அமைப்பில் ஒரு நூல்கூட இயற்றப்பெறவில்லை என்றும் அறிய முடிகிறது.

இந்த நூலே ஸம்ஸ்கிருத மொழியில் காணப்பெறும் முதல் குறவஞ்சிப் பிரபந்தம் ஆகும்

இலக்கியச் சுவை : இந்த நூலாசிரியரின் கற்பனை வளம் பல பாடல்களில் மிளிர்வதைக்காணலாம். உதாரணரணமாக ;—

தலைவனைப் பிரிந்து துன்பத்தில் வாடும் தலைவி தலைவனின் வழிபடு கடவுளான தியாகேசனிடம் முறையிடுகிறாள். "தியாகேசப் பெருமானே! உன்னைச் சரணடைந்தவர்கள் செய்துள்ள குற்றங்களை மன்னித்து அவர்களை ஆட்கொள்வது உனது செயல். நான் உன்னைச் சரணடைந்தும் என்னை நீ ஆட்கொள்ளவில்லையே! தக்ஷனுடைய சாபத்திற்குப் பயந்து, சந்திரன் உனது திருவடிகளில் சரணடைந்தவுடன் அவனை நீ திருமுடியில் வைத்துக்கொண்டு காக்கவில்லையா? நான் உன்னைச் சரணடைந்தும் என்னை நீ காக்காமல் இருப்பது நீதியோ? தெய்வமாக இருக்கும் நீ பாரபக்ஷமாக நடக்கலாமா?' (பாட்டு எண் 12 கண்ணி 3) என்கிறார்.

"தியாகேசா! நீ மலைமகளுடனும், குமரப்பெருமானுடனும் (ஸோமாஸ்கந்தனாக) ஒரே குடும்பமாக இன்பமுடன்தானே வாழ்கிறாய்? நான் மட்டும் இன்னும் கன்னியாகவே தலைவனைப் பிரிந்து வாழ்கிறேனே. எனது துன்பத்தை நீ உணர்ந்து உனது பக்தனான மன்னன் சகஜியிடம் என்னைப்பற்றிக் கூறவேண்டாவோ?" (பாட்டு எண் 12 கண்ணி 7) என்கிறார். இத்தகைய இடங்கள் நல்ல இலக்கியச் சுவை மிக்கவை.

தலங்கள் : வாராணசி, காஞ்சி, ஆனைக்கா, ஸ்ரீவாஞ்சியம், சிதம்பரம், திருவாரூர், சேது, மாயூரம் (மயிலாடுதுறை), மத்யார்ஜுனம், திருவிடைமருதூர், வேதாரண்யம், முதுகுன்றம், திருவேதிகுடி, சாயாவனம் (திருச்சாய்க்காடு), கும்பகோணம், திருக்கடவூர், பாபநாசம், ஸ்ரீரங்கம், காளத்தி, திருத்தவத்துறை, திருச்சிராப்பள்ளி, ஜகந்நாதம், தஞ்சாவூர் முதலிய தலங்கள் இந்நூலில் கூறப்பட்டுள்ளன.

நாடு : கௌடதேசம், பாண்டியநாடு, நேபாளம், மாளவம், கொங்கணம், அங்கதேசம், கேரளம், கேகயம், கோசம்பிநாடு, இலாடதேசம், கலிங்குநாடு முதலியன. இக்குறவஞ்சியில் கூறப்பட்ட நாடுகளாம்.

மலைகள் : சந்திரகிரி, நிஷதமலை, மந்திரமலை, மலைய பருவதம், விந்தியமலை, மைநாகசிகரம், கந்தமாதனமலை, கைலாயமலை, திருவண்ணாமலை, வேங்கடமலை, ரத்னகிரி, பொன்மலை, வெள்ளிமலை மற்றும் ஏழு குலகிரிகள் முதலிய மலைகள் இப்பிரபந்தத்துள் பேசப்படுகின்றன.

அணிகள் : சூடாமணி (பெண்கள் தலையிலணியும் ஒருவகை அணி), காதுகுண்டலங்கள், காற்சிலம்பு, வாலியுகம் (காதிலணியும் ஒருவகை அணி), கைகளில் அணியும் காப்பு, மோதிரம், கேயூரம் (புயங்களில் அணியும் ஒருவகை அணி), கழுத்திலணியும் கொடி, மேகலை ஆகிய அணிகலன் களைப்பற்றிய குறிப்புக்கள் அங்கங்கு இடம் பெற்றுள்ளன.

அடுக்குச் சொற்கள் : ஐதனம் ஐதனம், சருவிச் சருவி (40/1), மெத்தமெத்த (47/7), வகைவகை (47/10), என்னென்ன (47/12) முதலிய அடுக்குச்சொற்கள் இந் நூலுள் பயின்றுவந்துள்ளன.

சரித்திரக் குறிப்புக்கள் : மன்னன் இரண்டாம் ஷாஜி தஞ்சையில் ஆட்சிசெய்துகொண்டிருந்தபோழ்து சத்ரபதி சிவாஜியின் மகன் ராஜாராம் செஞ்சியை ஆண்டு கொண்டிருந்தான். இச்சமயம் ஔரங்கசீப் தனது படைத் தளபதி ஜுல்பிர்கானைக் கொண்டு செஞ்சியின்மீது படை யெடுக்கிறார். இதனால் ராஜாராம், மன்னன் ஷாஜியிடம் படை அனுப்பி உதவுமாறு தூது அனுப்புகிறார். இதனை ஏற்றுக்கொண்டு ஷாஜி தனது படையைச் செஞ்சிக்கு அனுப்புகிறார். இப்படை ஜுல்பிர்கானைச் செஞ்சியில் வெற்றி கொள்கிறது.

இச்சரித்திர நிகழ்ச்சியைச் ஷாஜி மன்னனுடைய காலத்தில் எழுந்த பல இலக்கியங்களும் கூறுகின்றன,[1] இந்த நிகழ்ச்சியைக் குறித்து இந்த நூலாசிரியரும் கீழே காணும் வண்ணம் குறிப்பிடுகின்றார்.

வல்லமை யால்மிக்க மன்னவ ரெவராலும்
வெல்லப் படாததில்லி வேந்தன் படையைவென்ற
செல்வன் ரணவிஜயன் செந்தமிழ் வாணர்கள்
சொல்லுக் குகந்தருள் சுகுணன் சகஜிதீரன்
-(பாடல் எண் 40)

" शातास्त्रजालमनङ्गो किरन्मयि शाहविभो ।
जेतासि टिल्लिपतेरपि संप्रति जेतुमहो " ॥

[சாதாஸ்த்ர ஜால மனங்கோ கிரண்மயி சாஹவிபோ ।
ஜேதாஸி டில்லி பதேரபிஸப்ரதி ஜேது மஹோ ॥
(பாடல் எண் 13)

யாப்பமைதி : இந்த நூலில் ஸம்ஸ்கிருத ஸ்லோகங்கள் அனைத்துமே (தெலுங்கு மொழியிலும், ஒரு விருத்தமும் - ஒரு பாடலும் அமைந்திருக்கிறது) தமிழ் யாப்பில் அமைக்கப்பட்டிருப்பதால் அதனைக் குறித்துச் சிறிது சிந்திப்போம் :

வெண்பா :

காமசர தீநா: கடிதவதீ கா:பூர்வம்
காமிநித்வம் காந்தை: கதபமே - ஸோமமுகி
நாமகத நாத்தாஸாம் நளினேக்ஷணேமமச
காமசர பாதாவ ஸி. -பாடல் எண் 41.

இதுநாள் என்னும் வாய்பாடானிற்ற ஒரு விகற்ப ஓராசிடையிட்ட நேரிசை வெண்பா ஆகும். தமிழ் மரபிற்

1. Sahendra Vlasa — Page 12, 13, 16.

கேற்பவே முதல் மூன்றடிகளிலும் 1, 3 சீர்களில் மோனை வந்துள்ளது. சொற்கள், வினைமுடிபு முதலியன வடமொழியாகவும், யாப்புமட்டும் தமிழாகவும் அமைந்தது. இது மூன்றாமடியில் மட்டும் ...'நாத்தாஸாம் நளினேக்ஷ' எனக் காய்முன் நிரை வந்து கலித்தளையாகிறது இது ஒன்றே மாறுபாடு.

மட்டு விருத்தம்: தமிழ் யாப்பிலக்கணத்தில் ஆழ்ந்த பற்றும், நல்ல அநுபவமும் கொண்டவர் இந் நூலாசிரியர் என்பதற்கு 'மட்டுவிருத்தத்தை' மற்றொரு உதாரணமாகக் கூறலாம். இவ்வகை விருத்தப் பாக்களை யாப்பிலக்கண நூல் மூலமாக அறிய முடியாது, அனுபவம் மிக்க புலவர்களின் கூட்டுறவினால்தான் இதை அறிய இயலும் திவ்யப்ரபந்தங்களில் இவ்வகைப் பாடல்களைக் காணலாம்.

ஒவ்வொரு சீரும் குற்றெழுத்தால் முடிவதும், ஒவ்வொரு அடியின் ஈற்றெழுத்தும் நெடிலால் முடிவதும், ஐந்து முதல் ஏழு சீர்களை உடையதும், ஒரே ஓசையாய்ச் செல்வதும் "மட்டுவிருத்தம்" எனப்படும். (பாடல் எண் 42)

மற்றும் அறுசீர், எண்சீர், ஆசிரிய விருத்தம், கலித் துறை, கட்டளைக் கலித்துறை, அகவல் போன்ற பா வகைகளை உரிய இலக்கணப்படி எதுகை மோனைகளுடன் அமைந்திருப்பதையும், தரு, கீர்த்தனம், சந்தவிருத்தம் ஆகியவைகளையும் இந்த மோகினி விலாஸக் குறவஞ்சியில் காண முடிகிறது.

அறுசீர் விருத்தங்கள் 18 :

(1, 2, 3, 4, 7, 9, 21, 23, 27, 29, 32, 34, 36, 38, 39, 43. 46, 49)

எண்சீர் வருத்தம் — 1 (48)
கட்டளைக் கலித்துறை — 7 (11,13,15,17,19,26,30)
அகவற்பா — 1 (6)

வெண்பா — *1 (41)*
மட்டுவிருத்தம் — *1 (42)*
தரு — *17 (5, 8. 10, 12, 16, 20, 22, 24, 25, 28, 31, 33, 35, 37, 40. 44, 50)*
பதம் — *3 (14, 18, 45)*
சருவல் சிந்து — *1 (41)* (எண்கள் தொடர் எண் வரிசையில்)

தேவநாகரி எழுத்து அறியாதவர்களும் பாடல்களைப் படித்து அறிவதற்காகத் தமிழ் எழுத்திலும் இந்நூலின் அனுபந்தமாக கொடுக்கப்பெற்றுள்ளன.

இந்நூலாசிரியர் :

நூலாசிரியரின் பெயர் 'சப்தரிஷி' [1] இவர் இரண்டாம் ஷாஜியின் அவைக்களப் புலவர், திருச்சி மாவட்டம் 'லாலுகுடி'யைச் சார்ந்தவராக இருக்கலாம் என்று கருதப்படுகிறது. இங்கு அருளாட்சி செய்துவரும் இறைவனின் திருப்பெயரான'சப்தரிஷீஸ்வரரின்'பெயரையே இவரது பெற்றோர்கள் இவருக்குச் சூட்டியுள்ளனர்போலும் இவரைப்பற்றி வேறு எந்த செய்தியும் கிடைக்கவில்லை. இவர் ஸம்ஸ்கிருதம் தமிழ் ஆகிய இருமொழிகளில் நல்ல புலமைப்பெற்றவர் என்பதை இந்த நூலால் அறிய முடிகிறது.

இவருடன், ஷாஜிமன்னனின் அரசவைப் புலவர்களாக வாசுதேவகவி, ராமபாரதி, முத்துக்கவிராயர் ஆகிய புலவர்களும் இருந்தனர். வாசுதேவ கவியும், ராமபாரதியும் பல

1. (a) सप्तऋषिकवि भक्तितोषित ... பாட்டு எண் 22
   (b) सप्तर्षि सरसपद विन्यास धन्या ... ,, 35
   (c) सप्तऋषिकवि सन्नुत चारुचरित्रम् ... ,, 45
   (d) சப்தரிஷி கவி கொண்டாடும் சகஜீ பூபாலன் நித்தம் வாழி ... பாட்டு எண் 48
   (e) मङ्गले सप्तऋषि सन्नुत पदे ... பாட்டு எண் 50

இசைப்பாடல்களை இயற்றியுள்ளனர். முத்துக்கவிராயர் தமிழில் ஷாஜியின் பெயரில் குறவஞ்சி இயற்றியுள்ளார். இவரியற்றிய மற்றொரு குறவஞ்சி 'தியாகேசர் குறவஞ்சி' என்று அறிய முடிகிறது.

சுவடியின் வரலாறு :

உலகப் புகழ்பெற்ற சரஸ்வதி மஹால் நூலகத்தின் சம்ஸ்கிருதப் பிரிவில் மட்டும் சுமார் 35,000 சுவடிகள் உள்ளன. இவற்றை ஓலைச்சுவடிகளாகவும், காகிதச் சுவடிகளாகவும் பிரிக்கலாம். கி. பி. 1880-ஆம் ஆண்டுக்கு முன்பாகஉள்ள சுவடிகளை டாக்டர் பர்னல் என்னும் அறிஞரைத் தலைவராகக்கொண்டு முதன்முதலில் வகைப்படுத்தியுள்ளனர். கி.பி.1880-க்குப்பின் பலர் இந்த நூல்நிலையத்திற்குத் தங்களிடமுள்ள காகிதச்சுவடிகளையும், ஓலைச்சுவடிகளையும் அன்பளிப்பாக அளித்துள்ளனர். இவைகளை அன்பளித்தவரின் பெயரிலேயே தொகுதி தொகுதியாக வைத்துக் காக்கப்பெறுகின்றன.

இவற்றில் தியாகராஜசுவாமி தொகுதி (T. S. Collection) என்ற பெயரில் ஒரு தொகுதி இருக்கிறது. இத்தொகுதியில் 37 சிறுசிறு மூட்டைகளாகக் கட்டப் பெற்று 1335 காகிதச்சுவடிகள் இருக்கின்றன. இவ்வளவு காகிதச் சுவடிகளையும் 28—3—1927ல் நூலகத்திற்கு அன்பளிப்பாக அளித்துள்ளனர். இந்தச் சுவடிகளை அளித்தவர் திரு. ஆத்மாராம் கோஸ்வாமி.

சமர்த்த ராமதாஸரது சீடரான ஸ்ரீ பீமராஜ கோஸ்வாமிகள் ஸ்ரீ சமர்த்த சம்ப்ரதாயங்களைப் பரப்ப தஞ்சையில் கி. பி. 1680-ல் மடத்தை நிறுவினர். அவருக்குப்பின் அவர்களுடைய சீடர்களான 1. அண்ணாஜி பாவா கோஸ்வாமி, 2. கோவிந்தபாள பாவாகோஸ்வாமி, 3. ஜோலிராம் பாவா கோஸ்வாமி ஆகியோர் தனித்தனி

யாகத் தஞ்சையில் மடத்தை நிறுவினர். இம்மடங்களில் ஹரிகதாகாலக்ஷேபங்களை நிகழ்த்திப் பக்திப்ரவசனங்களை செய்தனர். இம்மடங்களின் மூலமே தஞ்சையில் 'ஹரி கதை' என்னும் கலை மறுமலர்ச்சியடைந்தது.

இம்மடங்களில் அண்ணாஜி பாவா கோஸ்வாமிகளின் பரம்பரை கீழேகாணும் விதமாக அமைந்துள்ளது.

ஸ்ரீ பீமராஜகோஸ்வாமி

|

ஸ்ரீகுரு அண்ணாஜி பாவா கோஸ்வாமி

|

ஸ்ரீ ஆத்மாராம் பாவா கோஸ்வாமி

|

ஸ்ரீ ரகுபதி கோஸ்வாமி

|

ஸ்ரீ தியாகராஜ கோஸ்வாமி

|

ஸ்ரீ ரகுபதி கோஸ்வாமி

|

ஸ்ரீ ஆத்மாராம் கோஸ்வாமி

|

ஸ்ரீ ராமதாஸ் கோஸ்வாமி என்பதாகும்.[1]

இவர்களுடைய மடம் தஞ்சாவூர் தெற்குவீதியில் இருக்கிறது. இந்த மடத்தைச் சார்ந்தவர்கள் தஞ்சை மராட்டிய அரசின் அவையிலும், அரசாங்கத்திலும் பெரும்

1. இச்செய்தி இம்மடத்தின் அதிபதியாக இப்போதிருக்கும் திரு. பீமதாஸ் கோஸ்வாமி அவர்களிடம் கேட்டறிந்தது.

பதவி வகித்தவர்கள் என்றும் அறியமுடிகிறது. இவர்கள் ஹரிகதா காலக்ஷேபக் கலையில் வல்லவர்கள். மேலும் அரண்மனையில் நடிக்கப்படும் இசை நாடகங்களில் பங் கேற்றும் வந்தனர். சம்ஸ்கிருதம், மராட்டி ஆகிய மொழி களில் பெரும் புலமைப்பெற்றிருந்தனர். இவ்வளவு சிறப்பு மிகுந்த இந்த மடத்தில்தான் இந்தக்குறவஞ்சி காப்பாற்றப் பட்டு வந்துள்ளது.

இந்தக் குடும்பத்தினர் கலைஞர்களாகவும், அரண்மனை யுடன் நெருங்கிய தொடர்புள்ளவராகவும் இருந்ததால், இந்தச் சுவடி அவர்களிடம் இருந்திருக்கக்கூடும். இப் போது அவர்கள் மூலமாகவே இந்த நூலகத்தில் சேர்க்கப் பெற்றுள்ளது. இன்று சம்ஸ்கிருத - தமிழ் இலக்கிய உலகினுக்கு ஒரு சிறந்த இசை நாட்டிய நாடக நூலைக் காப்பாற்றிக் கொடுத்த பெருமை இந்த மடத்தின் தலைவர் களான ஸ்ரீ ரகுபதி கோஸ்வாமி, ஸ்ரீ ஆத்மாராம் கோஸ்வாமி ஆகிய இருவரைச் சாரும்[1]

மன்னன் இரண்டாம் ஷாஜியின் பெயரில் பாடப்பட்ட இந்த இசை நாட்டிய நாடகச் சுவடியின் ஒரேஒரு சுவடி தான் உள்ளது. இந்தக் குறவஞ்சி நாடகத்தில் நடித்த கலைஞர்க ளால் பயன்படுத்தப்பட்ட பிரதியாக இச்சுவடி இருக்கலாம்.

1. The valuable collection of the late M. R. Ry. Thyagaraja Goswamy of South Main Street, Thanjavur, which his grandson M. R. Ry. Atmaram Goswamy presented to the Library in accordance with the wishes of his late father M. R. Ry, Raghupathy Goswamy.

The collection contains Sanskrit Manuscripts and Books and also a few MSS. in Marathi.

-The Administrative Committee Annual Report of this Library. 31st March, 1927.

ஷாஜி மன்னனின் அவையில் தினந்தோறும் நாடகங்கள், நாட்டியங்கள்போன்ற கலைநிகழ்ச்சிகள் நடைபெற்றுள்ளன என்பதும் குறிப்பிடத்தக்கது. இத்தொகுதியில் 1115-ஆம் எண் சுவடியாக இச்சுவடி பதிவாகியுள்ளது.

சுவடியின் நிலையும் அமைப்பும் :

இது ஒரு காகிதச் சுவடி. 16 ஏடுகள் உள்ளன. தேவநாகரி லிபியில் எழுதப்பெற்றுள்ளன. தமிழ்ப்பாடல்களும், தெலுங்குப் பாடல்களும் தேவநாகரி லிபியிலேயே எழுதப்பெற்றுள்ளன. இடையிடையே பூச்சிகளினுல் காகிதங்கள் அழிக்கப்பெற்றுள்ளன. இந்த நூலகத்தில் இச்சுவடியைப் பாதுகாக்கும் பொருட்டு கி. பி. 1928-ஆம் ஆண்டு ஒரு படியெடுத்து வைத்துள்ளனர்.

இந்நூலைப் பதிப்பித்துள்ள முறை :

இந்த நூல் சமஸ்கிருதம் - தமிழ் ஆகிய இருமொழி இரசிகர்களுக்கும் உதவும் என்று கருதுகிறேன். யாப்பு முறை ஆய்வு, மொழி - இலக்கிய ஆய்வு, நாட்டிய - நாடக ஆய்வு, ஒருமொழி இலக்கணம் பிறமொழியில் ஆக்கம் பெற்றதைக் குறித்த ஆய்வு ஆகிய பலதுறைகளில் ஆராய்ச்சி செய்வோர்களுக்கும் இந்நூல் பயனளிக்கக் கூடியது. ஆதலால் தேவநாகரி லிபி அறியாதவர்களுக்காகத் தேவநாகரி லிபியைத் தமிழ் எழுத்துக்களிலும், தமிழ் எழுத்து அறியாதவர்களுக்குத் தமிழ் எழுத்தைத் தேவநாகரி எழுத்திலும் தனித்தனியே வெளியிட்டுள்ளேன்.

மேலும், சந்தர்ப்பங்களை எளிதில் விளக்கிக்கொள்ள சம்ஸ்கிருத ஸ்லோகங்களின் கருத்துக்களை மிகச்சுருக்கமாகக் கொடுத்துள்ளேன். உரிய ஸ்லோகங்களையும், பாடல்

களையும் அறிந்துகொள்ள மூலநூலில் தொடர் எண்கள் கொடுக்கப்பெற்றுள்ளன. அந்த எண்களின் உதவியால் தமிழ் - தேவநாகரி லிபிகளையும், அதன் விளக்கங்களையும் அனுபந்தத்தின் மூலம் அறிந்துகொள்ளலாம்.

சம்ஸ்கிருத இலக்கிய உலகில் இதுவரை 'குறவஞ்சி' என்னும் இலக்கியமில்லாமையால் 'குறவஞ்சி' இலக்கிய வளர்ச்சி பற்றியும், இந்த 'மோகினி விலாசக் குறவஞ்சி' நூலைப்பற்றியும் சற்று விரிவாக முகவுரையில் எழுதி யுள்ளேன்.

நன்றியுரை :

மன்னன் ஷாஜி அரசு கட்டிலேறி 300-வது ஆண்டான இவ்வாண்டு அம்மன்னனின் அவையில் நடைபெற்ற இக் குறவஞ்சி நூல் அச்சில் வருவது குறித்து மிக மகிழ்கிறேன். இவ்வளவு சிறந்த இந்நூலைப் பதிப்பிக்கும் பணியை நல்கிய எங்கள் நூலக முன்னாள் இயக்குனரும், மாவட்ட ஆட்சியரு மான திருமதி. சோசம்மா, இ. ஆ. ப., அவர்களுக்கு எனது நன்றியைத் தெரிவித்துக் கொள்கிறேன். இந் நூலுக்கு அணிந்துரை நல்கி சிறப்பித்துள்ள இந்நூலக இயக்குநரும் மாவட்ட ஆட்சியருமான உயர் திரு. து. இரா. இராமசாமி இ. ஆ. ப., அவர்களுக்கு எனது நன்றியைத் தெரிவித்துக் கொள்கிறேன். இந்நூல் பதிப் பாகும்போது பல உதவிகளைச் செய்த எங்கள் நூலகத்தின் நூலகரும், நிர்வாக அதிகாரியுமான திரு. அ. பஞ்சநாதன் M.A., B.Lib.Sc., அவர்களுக்கும் நன்றியைத் தெரிவித்துக் கொள்கிறேன். தமிழும் - சம்ஸ்கிருதமும்கலந்த இந்நூலைப் பதிப்பிக்கும்போது எனக்குச் சிறந்த அறிவுரைகூறி உதவிய

அறிஞர்கள் திரு. பு. மா. பத்மநாப சர்மா அவர்களுக்கும், பாலகவி திரு. மு, கோ. ராமன் அவர்களுக்கும், புலவர் திரு. ப. வே. நாகராஜன் அவர்களுக்கும் எனது நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

இதில், ஏதேனும் குறைகள் இருக்குமாயின் அது குறித்து அன்பர்கள் எழுதினல், அடுத்துப் பதிப்பிக்கும் போது திருந்திய பதிப்பாக' வெளிவர அது உதவும். எல்லாம் வல்ல எம்பெருமான் இத்தகைய இலக்கியப் பணியில் மேலும் மேலும் என்னை ஈடுபடுத்தி ஊக்க மளிக்க வேண்டுகிறேன்.

தங்கள்,

N. ஸ்ரீநிவாஸன்,
சம்ஸ்கிருத பண்டிதர்,
சரஸ்வதி மஹால் நூலகம்,

தஞ்சாவூர்,
16—2—84.

॥ श्रीः ॥

॥ महाकविसप्तर्षिप्रणीतं ॥

॥ मोहिनीविलासकुरवञ्जिनाट्यनाटकम् ॥

॥ नान्दी ॥

सरस्वतीस्तुतिः

॥ अरुशीर् वृत्तम् ॥

1. सुरपतिसदृशकीर्त्तेः सुन्दराङ्गस्य शाह-
नरपतेर्वैभवानि नाट्यतः सदसि वक्तुम् ।
सरभसमागतायास्सादरं किरातिकायाः
चरितमारचयितुं तां चतुर्मुखदयितां वन्दे ॥

विनायकस्तुतिः

2. वारणराजवक्त्रं वराऽभयसहितं तेजः
कारणं जगतामेकं करविधृतसृणिपाशम् ।
चारणसिद्धवन्द्यं चतुर्भुजं नत्वा तत्सं-
प्रेरणयाऽहं वक्ष्ये प्रथितशाहेन्द्रकीर्तिम् ॥

सुब्रह्मण्यस्तुतिः

3. धनपतिसमकोशस्य धार्मिकस्यावनीन्दोः -
अनितरसमानवीर्याऽनङ्गजप्रथितमूर्तेः ।
वनितया विहरतोऽस्य वर्ण्यते शाहनेतुः
गुणगण इह सहाया गुहदयिता मे भूयात् ॥

त्यागराजस्तुतिः

4. कनकशैलेन्द्रचापः कलितकर्पूरगात्रः
तनयसहचरीभ्यां वेष्टितो रत्नसिंहा- ।
सनपतिस्त्यागराजः शाहभूपालमौलेः
अनुदिनं मङ्गलानामावलिं संविधत्ताम् ॥

॥ तोडय दरु ॥

5. जय जिताखिलदनुज
जय भृतमुनिसमाज ।
जय लालिततनूज
जय देवराज ।
जय पदजिताम्भोज
जय नमदमरराज ।
जय शहजिकृतपूज
जय त्यागराज ॥ (जय जय) -१

कटिविधृतमृदुचीर

कमनीयफणिहार ।

निटिलाग्निहुतमार

निर्मलाकार ।

घटितशशिकोटीर

कलितबहुकर्पूर ।

जटिलतरकचभार

जय त्यागधीर ॥ (जय जय) -२

सुररिपुनिकरकाल

सुन्दरामलशील ।

दरहसितसुकपोल

दीनजनपाल ।

करतलहरिणलोल

कल्हारकृतमाल ।

गरलमसृणगलनील

गिरिजानुकूल ॥ (जय जय) -३

हृतविनतजनताप

हारभसितालेप ।

कितववचनदुरवाप

कृत्तिवृतसमीप ।

मतिमन्मनोदीप

महनीयसल्लाप ।

कुतुककरनिजरूप

कनकगिरिचाप ॥ (जय जय) -४

[सूत्रधारः - अस्य नाटकस्य कथासंग्रहः]

॥ अगवल् ॥

6. भोसलकुलेन्द्रे भूतलचन्द्रे ।

भासुरवपुषा पराजितमदने ।

नीतिकलादिनिखिलविद्यानाम् ।

एकनिवसतावेकभूपाल- ।

मुख्यकुमारे मुग्धविहारे ।

वाहननिर्वाहारोहणचतुरे ।

चोलधरित्र्यास्सुकृतविशेषैः ।

पालयामीति प्रजा निखिलाश्च ।

कमलाधव इव कार्मुकपाणौ ।

विमलचरित्रे विधृतप्रतिज्ञे ।

शहजिभूपाल सदर्चनातिशया- ।

दिह वयं वसाम इति निजलोका- ।

त्प्रमदोत्कर्षैः प्राप्तभूलोकान् ।

समुचितनिर्मलसह्यजातीर- ।

तटद्वयनिलयान् तानमरौघान् ।
तडित्प्रभारुचिरान् तादृशभजनैः ।
आराधयितुं अतितरां चतुरे ।
राजितवदने राजराजेन्द्रे ।
साधुतराध्वरसतताह्वानैः ।
अनिशमागमनेप्यलसतां मत्वा ।
दृढवसतीनामिव भुवि सुराणाम् ।
भूसुरेन्द्राणां पोषणनिरते ।
निखिलजनानां नित्यकृत्येषु ।
सुखमभिमृश्य शुभमपि वितीर्य ।
पालनचतुरे पार्थिवतिलके ।
लीलया जगतां लालनकुतुके ।
वासवतुल्ये वरमणिमाले ।
शासति जगतीं शाहभूपाले ।
काचन किराती कनकभूषाढ्या ।
वाचा सुधया वञ्चितभुवना ।
नेतरि नितरां नियमितहृदया ।
भूतलकमला भूतभविष्य- ।
द्वर्तमानज्ञा नवरत्नभूषा ।
नर्तनविद्यामूर्तिरतीव ।
नृत्यैस्सर्वानपि वशयन्ती ।

मत्तमातङ्गमदालसगमना ।
कमलावतिकां कामशरार्तां ।
विमलकपोलां विवशामलसां ।
शाहभूपाले सन्ततं चित्तम् ।
मोहतः कृत्वा मुषितकर्तव्याम् ।
ललितवचोभिः लालयन्तीव ।
कलितविश्वासां कथमपि कथनैः ।
प्रीणयन्ती तां प्रियतमावाप्त्या ।
प्राणनायिकया परमथ भूपे ।
तादृशविहारैः तया सह मुदिते ।
स्वयमपि पत्या सुलभं रमते । -इति
वृत्तमशेषं विस्तरात्कथये ।
तदिह मे भणितिः रमणीयाऽपि ।
बालकवच इव लाल्यतां विबुधैः ॥

॥ तदनु कमलावतीनायिकायाः सख्याः प्रवेशः ॥

(தலைவி கமலாவதியின் தோழியர் தோன்றுதல்)

॥ अरुशीर् वृत्तम् ॥

7. इन्दिर नेनवे पोत्ति इप्पुवि वेन्त रेल्लाम् ।
वन्दडि वणङ्गु शहजि मन्नन्मेल् मैयल् कोण्डु ।
सन्ततं तयङ्गि मेणि तलर्कम लाव तिप्पेर् ।
सुन्दर त्तिरुवा मन्त सुमुकितन् सखिवन्ताले ॥

दरु

8. उल्लासमाननटैयुं कोञ्जु किलिपोल्
ओय्यारमान मोलियुम् ।
मेल्लियरक्केलां मेलान कमलावति
मेच्चु सखि तोणिनाल् ॥

அறுசீர் விருத்தம்.

9. काचन नृपतिकन्या कमलावती नाम्ना ।
पूजिता रतिषु मोदाद्भूभुजा या मृगाक्षी ।
सा चिरमन्यासक्तं शाहभूपालवर्यम् ।
श्रीचोलदेशराजं चिन्तयन्त्यभ्युपैति ।

दरु

10. सरसिजलोचना सांप्रतं शाहेन्द्र-
विरहाकुला सरसविहृतिलोला
करकमललसितमणिकङ्कणा मृदुतनुः
कमलावती धुरि शनैरुपैति ॥ -१

ललितहृदये मुहुर्ललनां परां रहसि
लालयति शाहभूपालवर्य्ये ।
लुलिततनुशोभिता लघुतरमिव
स्वं च कलयन्त्युपैति सा कमलावती ॥ -२

कञ्जदललोचनं कन्दर्पनिभतनु
तञ्जापुराधिपं शाहभूपम् ।
मन्जुतरभूषणं मनसि विभुमनुचिन्त्य
कुञ्जरगतिः कुतुकतस्समेता ॥ -३

கட்டளைக் கலித்துறை.

11. बाला तु कापि लताभवने भवदाकलिते ।
तालानुकारिकुचावनता त्वदनागमनात् ।
लोला भवद्रतिकेलिषु सा लुलितेतितराम् ।
कोलाहलं कुरु शाहनृपाय कुहूमुख मे ॥

दरु

कमलावती :-

12. सुदति शीघ्रमेष्यामीति
सुललितं वचोभिहितम् -त्यागराज
मदनाकृतेश शाहेन्द्रस्य
मायां किं वा कथयामि ? -त्यागराज -१

मामतिसन्धाय सत्यं
अन्यामेवाऽसौ भजते -त्यागराज
कामहतकबाधायाः
कथय किं करोमि कृत्यम् -त्यागराज -२

त्वामहं दैवतमिति

तोषये पूजया मोहात् -त्यागराज

सोमचूड नीतिरेषा

सुमुख किं ते कथय युक्ता -त्यागराज -३

कामपूर्तौ त्वां भजतां

कमनीय तव का हानिः ? -त्यागराज

सोमास्कन्द किं तेऽथवा

सुखमयसे त्वं वामाक्ष्या ? -त्यागराज -४

कान्तेन त्वं शाहेन्द्रेण

घटयसि चेन्मामधुना -त्यागराज

किं तथाऽहं नाकलये

क्रीतेव तव सपर्याम् -त्यागराज -५

கட்டளைக் கலித்துறை.

13. शतास्त्रजालमनङ्गो किरन्मयि शाहविभो ।

जेतासि ढिल्लिपतेरपि संप्रति जेतुमहो ।

वीताङ्कमेनमनादरमावितनोषि यदि ।

त्रातारमत्र कमाकलयामि तदा भुवि मे ॥

கமலாவதி தோழியிடம் கூறல் :

॥ पदम् ॥

14. एकराज गम्भीरन् इदमां साल्व कुमारन्
भोगदेवेन्द्र ननुगुणरामलेन् मनदु
वाडुमो - अवनूलीलयै
नाडुमो - इप्पडि सुखं
तेडुमो - इन्नमवनै
कूडुमो - सोडाहमाने (एक) -१

कळभमणिन्दमुलै पुलकमरुम्बामले ।
इळमै परुवं दन्निल् तलरुवतेन्नुडय ॥
योगमो - अल्लादनु
भोगमो - एवर् शबित्त
शापमो - अन्नमेयेन्तन्
पापमो - पावि दैवमे (एक) -२

शाहराजेन्द्र भूपन् सरसगुण सल्लापन् ।
मोहन मदनरूपन् मुत्ताडवे येन्नुडन् ॥
वारानो - कनिवायूरल्
तारानो - इंद तुयर्
तीरानो - वन्देन् तापं
पारानो - पावि दैवमे ॥ (एक) -३

கலித்துறை.

15. ईलागु नेनु दिनमु हृदयेशुनि ने दलचि ।
चालानु तापपडवशमा ? सर्वेशुडु नन् ।
नेलागु रक्षिंचि शाह महीपुनितो नेपुड्ड ।
बालारो चेरुदुनो चोलभूमि नृपालुनितो ।

दरु

(एलपदम्)

16. नेटिवरकु नायन्दु नोचेलियारो - वाड्डु
निरतिशय प्रेमजेशे चेलियारो ।
पोटिगा आसुदतियन्दु चेलियारो - सहजि
भूपालुड्डु चेरे निपुड्डु चेलियारो ॥ -१

नाकंटे वानिकि अदि चेलियारो - नयमु
नान्तरङ्गमाय चेलियारो ।
आकुंटे नेनेमिशेतु चेलियारो - वाड्डु
आतीरुने चलमुजेशे चेलियारो ॥ -२

माय वलवेशि अदि चेलियारो - तन
माटकु लोजेसे वानि चेलियारो ।
नायन्द मीरिन दयगा चेलियारो - वानि
नातो गूर्परादा नेटिकि चेलियारो ॥ -३

(வேறு)

கட்டளைக் கலித்துறை.

17. लीलासु सागसि शाहनृपे लघु मे वचनात्
चेलाञ्चलं च विधूय जवाच्चलिते हृदयम् ।
डोलायितं सखि मे नितरामुडुराजमुखम्
चोलावनीपतिमानय भोसलनाथमये ॥

॥ पद्यम् ॥

॥ पल्लवी ॥

18. इन्दविरहं येन्दनुक्कु
येप्पो तोलैयुं शोल्लु ॥ (इन्द)

॥ अनुपल्लवी ॥

सन्ततमुं येन्तनुल्लं
सहजिराजनै निनैन्दु ॥ (इन्द)

॥ शरणम् ॥

चन्द्रकान्तमणि मेडैयिल् पायुं
सुन्दरं सिरन्दुयर् मलरणैमीतिल् ।
अन्तमान भोसलकुल नायकन्
इन्द्रभोगमाय् वन्दणैयामल् ॥ (इन्द)

तुङ्गन्विकुल शेखरणन् तन्नै
    अङ्गजन् विविध खेलियिल् नयमाय् ।
पोङ्गमाहवे कोंकैयिलनैन्दु
    नंकैये अवनै नान् मरुवामल् ॥ (इन्द) -२

परितविक्कुते पावियेन् मनतु
    सुरतलीलैयिन् सुखन्तनै निनैन्दु ।
सरसन् तञ्जैवाल सहजि नराधिपन्
    वरवु कण्डु नान् मनमकिलामल् ॥ (इन्द) -३

கட்டளைக் கலித்துறை.

19. इल्लैयेन्नातरुल् एकोजि मैन्दन् इवरुन्तङ्ग
पलक्किलेरि वरुं वीथि कण्डन्तप्पावैयिवर्
नल्ल वडिवेन् मोहं कोण्डालडि नामवरै
सोल्लक्कणक्कुमुण्डो तञ्जैवाल मन्नन् तोकैयरे ॥

दरु

॥ पल्लवी ॥

20. आसै कोण्डेन् सहजीन्द्र नावलन् मीदिल् (आसै)

॥ अनुपल्लवी ॥

नेसमाहि मोसं सेय्यदरियामल् ॥ (आसै)

॥ शरणङ्गल् ॥

कादलानारेन्तनैप्पोल् आवारा - इन्द
काशिनियिल् कण्डतुण्डा ? मेलिये शोल्लाय्
तोतकमे सेय्दारेन्तन् मीतिल् - अवरायिनि
शोल्वतेतु अवर् नीति तोकैये पाराय् ॥ (आसै) -१

वातुशोन्न पेण्कलुड नेतुशोल्वेन् - अवर्
वार्तयै मिहवुं नंबि मैयलागिनेन्
भेदकमे शेय्वदरियामल् पोनेन् - पेण्
बुद्धियिले मुट्रुं मोसं पोनेन् नान् ॥ (आसै) -२

येल्लामुमुन्दनुक्का दयवु काणेन् - नान्
येन्नसेय्त्रे निन्नमवर् वरवु काणेन्
मेलप्पोय् अलैत्तुक्कोण्डु वाडि माने - माय
कलनवन् मार्गमेतु अरिन्दिलेने ॥ (आसै) -३

सहजि महिप निङ्गे वाराणा - येन्नै
सरसमाय् वन्दुमुन्पोल् सेरानो
नकक्कुरिवैतेन् मोहं तीराणो - कूडि
नयमाय् चरुवि मुत्तन्ताराणो ॥ (आसै) -४

அறுசீர் விருத்தம்.

21. आलि मे हृदयतापं अतितरां जानासि त्वं ।
चोलदेशाधिपेन चिरमपि वञ्चितायाः ।
पालनं मम तु कर्तुं प्रभवसि यदि किरात- ।
बालिकामानय त्वं प्रष्टुमेवाशयं मे ॥

(கமலாவதியின் மையலைத் தீர்க்கவேண்டி அவளது தோழி குறிகேட்க உடன் குறத்தியை அழைக்கச் செல்லல்)

दरु

22. कमलावतीहृदयकामव्यथां परिहर्तुं ।
सुमुखी सखी किरातीं सत्वरमानेतुं याति ॥

अथ किरातिकाप्रवेशः — *குறத்தி வருதல்*

दरु

1. पाहि पाहि मुनीन्द्रवन्दित
पाहि शाहनृपार्चित ।
पाहि विधिहरिमुखसुरेडित
पाहि मङ्गलदायक ॥ (पाहि पाहि)

2. तुङ्गपीनकुचानन्दाङ्ग - नि
जाङ्गना लसिताभङ्ग ।
पिङ्गकेशतरङ्गशोभित
गङ्गयाश्रित शङ्कर ॥ (पाहि पाहि)

3. पङ्कजाक्ष मृगाङ्कचूड
मत्तगजत्वगलङ्कृत ।
पुङ्गवध्वज शङ्करी - हृद-
येश सुन्दर किङ्कर ॥ (पाहि पाहि)

4. वित्तनायकक्लृप्तपूजन
मत्तवैरिविदारण ।
सप्तऋषिकविभक्तितोषित
चित्तसन्नुत मुक्तिद ॥ (पाहि पाहि)

